9th November 1966]

*(இ) ஆமெனில், இதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No representation was received by Collector through Revenue Divisional Officer, Ariyalur regarding the supply of rice to Ariyalur Town Panchayat. But during the visit of the Chief Minister to the area in July 1966 representations were made to him for supplying rice to the public of Ariyalur Town Panchayat. One hundred and eighty bags of rice, 50 tonnes of wheat, 10 tonnes of cholam per month were placed at the disposal of the Reveune DivisionalOfficer, Ariyalur for distribution. The issue was made at the rate of one Madras Measure of rice per family per week (with wheat and cholam) from July 1966. The arrangement is still in force.

### *Family Planning Programme*

* 566 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have envisaged a revised and reorganised Family Planning Programme for the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) A copy of Government proceedings [a] No. 2460, Health, dated 8th December 1965 wherein the reorganised Family Planning Programme has been sanctioned for implementation is placed on the Table of the House.

***திரு. கோ. சி. மணி*** *: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் பிரகாரம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக இதை அமலாக்க வேண்டுமென்றும் அதற்கு ஒரு விழா வைத்துக் கொண்டாடி அதிகப்படியாக எங்கு செய்துகொள்கிறார்களோ அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்குப் பரிசு அளிப்பதாகக் கூறி அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அங்கே இருக்கின்ற பீ.டீ.ஓ.-க்கள், மற்றவர்கள் எல்லாம் 60 வயதான கிழவர்கள், கல்யாணம் ஆகாதவர்கள் இவர்களையெல்லாம் கட்டாயப்படுத்தி குடும்பக் கட்டுப்பாடு செய்கின்ற முறைகளை மாற்றி, வேறு மாற்றுமுறைகளைக் கையாள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?*

***கனம் சபாநாயகர்*** *: வேறு என்ன முறை இருக்கிறது?*

***கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்*** *: இந்த முறை நல்ல முறை. பிளாக் லெவலிலே, பஞ்சாயத்து யூனியன் லெவலிலே பிரசாரம் பண்ணுகிறார்கள். அதை எல்லோரும், கிழவர்களும், கல்யாணம் ஆகாதவர்களும் வந்து கேட்கிறார்கள். வயதிலேயோ அல்லது கல்யாணம் ஆகாதவர்கள் என்றோ இதிலே பாகுபாடு கிடையாது. கட்டுப்படுத்திக் கொள்வதற்கு யார் முன்வருகிறார்களோ அவர்கள் செய்துகொள்வார்கள்.*

---

[a] Printed as Appendix X on pages917–928

[9th November 1966

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இங்கே கொடுக்கப் பட்டுள்ள அறிக்கையில் அளவான குடும்பமே ஆனந்தக் குடும்பம் என்று போட்டிருக்கிறார்கள். ஆனந்தக் குடும்பம் வேண்டும் என்பதற்காக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் எல்லாம் எவ்வளவு கர்ப்பத்தடை செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள், அங்கே சத்திரத்திலே இருக்கின்ற சாமியார்கள், பொம்பளைச் சாமியார்கள் இவர்களையெல்லாம் 60, 70 வயதிற்கு மேற்பட்டவர்களையெல்லாம் பிடித்து ஆப்பரேஷன் செய்து விடுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படித் தெரிந்தால் இந்த முறைகளை மாற்றி வேறு முறைகளைக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், கனம் அங்கத்தினர் அவர்கள் என்ன முறையிலே மாற்றவேண்டுமென்று ஸ்பெஸிஃபிக்காகச் சொல்லவில்லை. ஃபாமிலி பிளானிங் ஸ்கீமின் அடிப்படையில் மூன்று குழந்தைகள் இருக்கக்கூடியவர்கள் செய்துகொள்ளவேண்டும். இதை அமல்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் எந்த அளவுக்கு ஒப்புக்கொள்கிறார்களோ அவர்கள்தான் செய்துகொள்கிறார்கள். இந்த சாமியார் கதையெல்லாம் எனக்குத் தெரியாது.

கனம் சபாநாயகர் : வேறு ஏதாவது முறை இருந்தால் எழுதியனுப்பச்சொல்லி அதைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இப்பொழுது இருக்கின்ற முறையில் கல்யாணம் ஆனவர்கள், ஆகாதவர்கள் எல்லோருக்கும் செய்கிறார்கள். ஆகவே, கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கண்டிப் பாகச் செய்யக்கூடாது என்று உத்திரவிடுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கல்யாணம் ஆகாதவர்களுக்கு இந்த ஸ்கீமே கிடையாது.

திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர் : முஸ்லீம்களும் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்கிறார்களா? அவ்வாறு அவர்கள் செய்யாவிட்டால் முஸ்லீம்கள் ஜனத்தொகை பெருகி, முஸ்லீம் நாடு ஆகிவிடும் என்ற காரணத்தால் அவர்களும் செய்துகொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : குடும்பக் கட்டுப்பாடு திட்டம் ஜாதி அடிப்படையில் செய்யவேண்டுமென்பதில்லை. யார் யார் எல்லாம் கட்டுப்படுத்தவேண்டுமென்று தேவைப்படுகிறதோ அவர்கள் செய்துகொள்ளலாம். இதிலே முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், ஹிந்துக்கள் எல்லோரும் பண்ணிக் கொள்ளலாம். இதிலே பிரைவேட் நர்ஸிங் ஹோமிலே பண்ணிக்கொள்ளக் கூடியவர்களுடைய தகவல் நமக்குத் தெரியாது. எல்லோரும் அரசாங்கத் துறையிலும், பிரைவேட் டாக்டர்களிடத்திலும் செய்துகொள்கிறார்கள்.

9th November 1966]

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலே ஆப்பரேஷன் செய்வது அல்லாமல் லூப் பொருத்தப் படும் முறையை பெண்கள் இப்பொழுது அதிகமாக விரும்புகிறார்கள். இந்த முறையை மாவட்டங்களில் எல்லாம் அமல்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன? இப்படி லூப் பொருத்திக்கொள்கின்ற முறைக்கும் அரசாங்கம் 10 ரூபாய் அளவிலே இனாம் வழங்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதை எல்லா ஜில்லாக்களிலும், நாகாகாக்களிலும் இன்ட்ரடியூஸ் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. இது தஞ்சாவூர், மதுரை, சென்னை போன்ற இடங்களிலே செய்யப்பட்டு வருகிறது. இதற்கு 10 ரூபாய் இனாம் கொடுப்பதற்கு இயலாது.

**புலவர் கா. கோவிந்தன் :** குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் நல்லது தான். ஆனால், இதை இந்திய சர்க்காரிலே உள்ள எல்லா மாநிலங்களும் ஆர்வத்தோடு பின்பற்றுவதாகத் தெரியவில்லை. நம்முடைய மாநிலம்தான் பின்பற்றி வருகிறது. மற்ற மாநிலங்கள் ஆர்வம் காட்டாத நேரத்திலே தமிழ்நாட்டிலே மட்டும் ஆர்வம் காட்டினால் நம்முடைய ஜனத்தொகை குறையும். அதன் காரணமாக மத்திய சர்க்காரிலே இருந்து நமக்குக் கிடைக்கக்கூடிய பங்கு, அது மக்களுடைய எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் கொடுக்கப் படுகிறது, குறைந்துவிடும். ஏற்கனவே இப்பொழுது பார்லிமென்டில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 39 ஆக குறைந்திருக்கிறது. ஆகவே, அந்த இடைபூறு ஏற்படும் என்ற காரணத்தால் அதைப் பரிசீலித்து மற்ற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அளவிலே தான் நம்முடைய மாநிலமும் இருக்கவேண்டுமென்ற வகையில் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், எல்லா மாநிலங்களும் இதை ஒப்புக்கொண்டுதான் அகில இந்திய ரீதியில் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு அமலாக்கப்படுகிறது. ஒன்று பெருமைப் படக்கூடியது, நாம் கொஞ்சம் தீவிரமாகச் செய்கிறோம் என்பது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவரவர்களே, தொழுநோய் உள்ளவர்கள், பெருநோய் உள்ளவர்கள், இதன் காரணமாக அங்கஹீனமாக்கப்பட்டவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் ; அவர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் இத்தகைய திட்டத்தைக் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டமாகக் கொண்டுவர அரசினர் முயற்சிப்பார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தொழுநோய் உள்ளவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் கட்டாயப்படுத்துகின்ற முயற்சி நல்லதுதான். ஆனால், இப்பொழுதே சிலர் வந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** குடும்பக் கட்டுப்பாடு மாநிலத்திலே செம்மையாக நடைபெற்று அதன்மூலம் கருதிய பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. குடும்பக் கட்டுப்

[9th November 1966

பாடு செய்து கொள்பவர்களுக்கு நன்கொடை கொடுப்பதைப்போல் மாநிலத்தைப் பொறுத்தவரையில் மாநிலங்களுக்கும் நன்கொடைகள் வருவதில்லை. அதற்குப் பதிலாக தண்டனைதான் வந்து கொண்டிருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டதின் மூலம் பார்லிமெண்டிலே இரண்டு சீட்கள் பறிபோய்விட்டன. ஆகவே, அம்மாதிரி ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்ற முறையில் வழிவகை செய்ய முன்வருவார்களா ?

(பதில் இல்லை.)

திரு. மு. கருணாநிதி : குடும்பக் கட்டுப்பாடு என்று பெயர் இருப்பதால், ஏதோ இப்பொழுது குடும்பம் கெட்டு அலைவது போலவும், அதைக் கட்டுப்படுத்துவதுபோலவும் இருக்கிறது. ஆகவே அந்தப் பெயரை மாற்றி குழந்தைக் கட்டுப்பாடு என்று கொண்டுவருவார்களா? (சிரிப்பு).

(பதில் இல்லை.)

திரு. எஸ். சின்னையன் : கனம் சபாநாயகர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ் சாதாரணமாக ஏழைகள் அதிகமாக அறுவை சிகிச்சை செய்து கொள்ளுகிறார்கள். அறுவை சிகிச்சை செய்த பிறகு 15, 20 நாட்களுக்கு மேல் தொழில் செய்து ஜீவிக்க முடியாமல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால் இந்த உதவித் தொகையை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுக்க முடியுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்பொழுது 30 ரூபாய் கொடுக்கிறோம். அதற்கு மேல் அதிகப்படுத்துவதற்கு உத்தேசமில்லை. அந்தக் காலத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் கிடைக்க முடியாத நிலை ஏற்படும் என்ற காரணத்தால்தான் 30 ரூபாய் கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்தைத் துவங்கியதிலிருந்து பேச்சு வழக்கில் அனுசரிக்க வேண்டிய தரம் குறைவதையும், நாணம், வெட்கம் இவை எல்லாம் குறைவதையும் சீர்திருத்துவதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது ? ஏதாவது ஒரு முறையை அனுசரிக்க வேண்டுமென்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்துமா ?

கனம் சபாநாயகர் : இதைப் பற்றி அதிகம் பேசாமல் இருந்தால் நல்லது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்காக இப்போது கையாளப்படுகிற முறைகளில் அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. தீமை விளைவிக்கக்கூடிய முறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, 30 வயதுக்கு மேல்தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நிர்ணயித்து ஒரு சட்டத்தை இயற்ற அரசாங்கம் முன்வருமா ?

9th November 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போது இருக்கும் பெண் பிள்ளைகள் எல்லாம் 24 வயது, 25 வயதுக்கு மேல்தான் திருமணம் செய்துகொள்கிறார்கள். முன்பு போல் 14 வயது 15 வயதில் திருமணம் செய்து கொள்வதில்லை. அந்த வயதையும் உயர்த்தலாமா என்பது அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. பெண்களுடைய வயதை உயர்த்தினால் ஆண்களுக்குக் கல்யாணம் ஆகும்போது 60 வயது ஆகிவிடும். (சிரிப்பு.)

கனம் சபாநாயகர் : வயதைக் குறைக்க வேண்டுமென்று போராட்டம் ஆரம்பித்து விடுவார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தத் திட்டத்திற்குப் பிரசாரம் அவசியமாகும். இந்தத் திட்டம் அபிவிருத்தி அடைவதற்கு நம்முடைய சர்க்கார் எந்தெந்த வகையில் பிரசார வகைகளை மேற்கொண்டிருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஃபாமிலி பிளானிங் வீக் நடத்தப்படுகிறது ; டிராமா, சினிமாப் படங்கள் மூலம் பிரசாரம் செய்யப்படுகிறது. பிரசாரகர்களும் பிரசாரம் செய்து வருகிறார்கள். பாம்ஃப்லெட்ஸ் விநியோகிக்கப்படுகின்றன.

திரு. எஸ். முருகையன் : சட்டமன்ற உறுப்பினர்களில் எவ்வளவு பேர் கருத்தடை செய்து கொண்டிருக்கிறார்கள் ?

கனம் சபாநாயகர் : எல்லோரும் என்னிடம் வந்து ஒரு லிஸ்ட் கொடுத்துவிட்டுப் போங்கள்.

திரு. மு. கருணாநிதி : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம், அதற்கான முறைகள் பலன் அளிக்கவில்லை என்ற முறையில் தினப் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வருகின்றன. இது குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்குத் தடையாக இருக்கிறது. அந்தச் செய்திகள் பத்திரிகைகளில் வராமல் தணிக்கை செய்யப்படுமா ? தடுக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பத்திரிகைகளில் ஏதேதோ செய்திகள் வரும். அவற்றுக்கும் நடைமுறையில் நடக்கக்கூடிய திட்டங்களுக்கும் உண்மையான சம்பந்தம் இல்லை.

கனம் சபாநாயகர் : பத்திரிகைகளுக்கு 'ஃபண்டமென்டல் ரைட்ஸ்' இருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப்பற்றித் தவறான கருத்துக்களை விஞ்ஞான ரீதியில் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு பத்திரிகைகள் பிரசாரம் செய்யும்போது தக்க வல்லுநர்களைக் கொண்டு மறுப்பு அறிக்கைகளைக் கொடுத்தால் மக்களுக்கு அதைப் பற்றிய விளக்கம் கிடைக்க வழி ஏற்படும். மெயில் போன்ற பத்திரிகைகளில் தினசரி ஒரு கட்டம்

போட்டு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை வலியுறுத்தி வருகிறார்கள். அந்த முறையில் அதைப் பற்றி வலியுறுத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்வார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றிய மாறான செய்திகள் பத்திரிகைகளில் வரும்போது மறுக்க வேண்டுமென்றுதான் நானும் எண்ணுகிறேன். ஆனால், பதில் அளித்தால் அவர்கள் திரும்ப பதில் அளித்து இப்படி போய்க்கொண்டே இருக்கும். ஆகவே, எங்கெங்கு பிரசாரம் செய்யப்படுகிறதோ அங்கெல்லாம் பத்திரிகைகளில் வந்த செய்திகள் உண்மைக்கு மாறானவை என்பதும் விளக்கிச் சொல்லப்படுகிறது.

முடநீக்கியல் நிலையங்கள்

* 567 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :**
**திரு. வை. சங்கரன் :** } கனம்

சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் எங்கெல்லாம் ஆர்தோபீடிக் சென்டர்கள் இயங்கி வருகின்றன ?

(இ) அவைகளுக்கு சர்க்கார் கொடுத்து வரும் உதவியின் விபரம் என்ன ?

(உ) சென்னை நகரிலுள்ள ஆந்திர மகிள சபாவின் மேற்பார்வையிலுள்ள ஆர்தோபீடிக் சென்டருக்கு சர்க்கார் ஏதேனும் மானியம் வழங்கியுள்ளதா ?

(எ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(ஐ) அங்கு சிகிச்சைக்குச் செலவிடப்படும் மருந்துச் செல்வை முற்றிலும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளும் உத்தேசமுண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : (அ) முதல் (ஐ) வரை— சபை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். செல்வராஜன்** : அரசாங்கம் கொடுத்திருக்கக் கூடிய குறிப்பிலிருந்து சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் மட்டுந்தான் ஆர்தோபீடிக் சென்டர்கள் இருப்பதாகத் தெரிகிறது. எல்லா மாவட்டங்களிலும் இந்த சென்டர்களை அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : எல்லா ஜில்லா மருத்துவமனைகளிலும் ஆர்தோபீடிக் சென்டர்களை அமைக்க வேண்டுமென்றால் தகுந்த கட்டடம் வேண்டும், எக்விப்மென்ட்ஸ் வேண்டும். இவைகளை எல்லாம் வாங்க வேண்டுமென்றால் அதிகப்படியாகச் செலவு ஏற்படும் என்ற காரணத்தால் தற்போது இந்த மூன்று இடங்களில் மட்டும் நடத்தப்படுகிறது. மற்ற ஜில்லாக்

[a] 928–929-ம் பக்கங்களில் பதினொன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.